# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 408/TPT/2016

ஆணை எண்: 054/2017

நாள்: 31/03/2017

பொது மக்கள்,
போளூர் நகரம்,
போளூர் பேரூராட்சி,
போளூர் - 606 803.

- முறையீட்டு மனுதாரர்கள்

செயல் அலுவலர்,
போளூர் பேரூராட்சி,
போளூர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

- எதிர் மனுதாரர்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சி பொது மக்கள் சார்பாக அளிக்கப்பட்ட 15.06.2012 நாளிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண்.15575/2012/இ2 நாள்: 6/5/2016 வாயிலாக இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 0408/TPT/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சி பொது மக்கள் சார்பாக அளிக்கப்பட்ட மேற்படி முறையீட்டு மனுவில், குறிப்பிட்ட நபர்கள் பேரூராட்சியை கைப்பற்றி நிதி நிர்வாகத்தை கையில் எடுத்துக்கொண்டு வேலை வாய்ப்பு மூப்பு அடிப்படையில் தேர்வு செய்யாமல், பணம் லஞ்சமாக பெற்றுக் கொண்டு பணியிடங்களை நிரப்புவதாகவும், குறிப்பிட்ட நபர் ஒருவரே நடைபாதை, பாதசாரி கடைகளை ஏலம் எடுப்பதாகவும், தினசரி குறிப்பிட்ட தொகையை

வாங்குவதாகவும் இதனை தட்டிக் கேட்பவர்களுக்கு பாதிப்பு செய்வதும் ஊரறிந்த உண்மை எனத் தெரிவித்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டியுள்ளார்.

2. 25.11.2016 நாளிட்ட இம்முறைமன்ற அறிவிப்பாணை வாயிலாக புகார் மனுவின் உண்மை தன்மையினையும், புகார் மனுவின் மீது விளக்க அறிக்கையினையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்திட போளுர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது. அதன்படி செயல் அலுவலர் தனது 09.12.2016 நாளிட்ட விளக்க அறிக்கையில், 2012-13ஆம் ஆண்டிற்கு ஏலம் விடப்பட்ட குத்தகை இனங்கள், நெறிமுறைகளின் அடிப்படையில், மன்ற தீர்மானத்தின்படி, நிறைவேற்றப்பட்டு, ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி அறிக்கை மன்ற உறுப்பினர்கள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு நேரடியாகவும், பொது மக்களுக்கு டாம் டாம் மூலமும், நாளிதழ் மூலமும் விளம்பரம் செய்யப்பட்டு உரிய காவல் துறை பாதுகாப்புடன், பொது ஏலம் விட்டு ஏல விவரத்தினை அனைவருக்கும் அறியவைத்து குறிப்பிட்ட காலத்திற்கு குத்தகை இனங்களை அனுபவிக்க குத்தகைதாரர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், மனுதாரர் தெரிவித்துள்ள குத்தகை இனங்கள், உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு முடிவடைந்த பின்னர் 28.03.2013ம் தேதியில் உரிய சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் பொது ஏலம் விடப்பட்டுள்ளது என்றும் பொது ஏலம் தொடர்பான ஆவண நகல்களாக அரசு ஆணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 19.9.2008, தீர்மான நகல்கள் 2012–2013 ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி அறிக்கை நகல், அறிவிப்பு நகல், டேவணித் தொகை ரசீது நகல் மற்றும் குத்தகை ஒப்படைப்புக்கான நகல் ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். மேற்படி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பரிசீலிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. இந்நேர்வில், முறையீட்டில் குறிப்பிட்டுள்ள லஞ்ச புகார் மற்றும் பிற புகார்கள் குறித்து போதிய ஆதார ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்காத நிலையில், மேற்படி முறையீட்டு மனு மீதான நடவடிக்கையினை கைவிடலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்.

பெறுநர்

செயல் அலுவலர்,
போளுர் பேரூராட்சி,
போளுர்,
திருவண்ணாமலை மாவட்டம் - 606 803.